<u>10.02.2026</u>
<u>O.S.No.43/2011</u>
<u>வா.சா.1.திரு.மகேந்திரன், த.பெ.திரு.கருப்பணன்</u>

<u>சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்</u>

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

20) வா.சா.ஆ.1 பட்டாவில் பெரியபுள்ளியன் மற்றும் 11 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சம்மந்தமாக அந்த 11 நபர்கள் யார் என்று குறிப்பிட்டு குறிப்பிடப்படவில்லை என்றால் கிராமத்தை சார்ந்தவர்கள் குறித்து இணைக்கப்பட்ட ஆவணத்தில் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் 11 நபர்கள் யார் யார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. அந்த 11 நபர்கள் பற்றிய விவரம் எதுவும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் இல்லை என்றால் அவர்கள் மற்ற சமூதாயத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கில் சேர்ந்தால் பிரச்சனை பெரிதாகிவிடும் என்பதால் வழக்கில் சேர்க்கவில்லை. மேற்படி விவரம் வழக்குரையில் சேரக்கவில்லை என்றால் சரிதான்.

21) வா.சா.ஆ.2 பட்டாவில் குறிப்பு என்று புல எண்.369 உட்பிரிவு எண்.2A2 பத்திரப் பதிவு எண்.––– அடிப்படையில் பட்டா மாறுதலுக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது சம்மந்தமாக அந்த ஆவணமும் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. பட்டா மட்டுமே தாக்கல் செய்துள்ளோம்.

22) வா.சா.ஆ.3 ஆவணம் 28.07.2010ம் தேதி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் வள்ளாலப்பட்டி தெற்கு வளவு தற்கால டிரஸ்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது சம்மந்தமாக தற்கால டிரஸ்டி யார் என்ற விவரம் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால்

சொல்லியுள்ளோம். தற்கால டிரஸ்டி யார், எத்தனை நபர்கள் உள்ளார்கள் என்ற விபரத்தையோ முன்பாக இருந்தார்கள் என்ற விபரத்தையோ வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தற்கால டிரஸ்டி யார் யார் என்று விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் எங்கள் வழக்குப்படி அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரை என்று சொல்லியுள்ளோம் என்றாலும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் என்னுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பழைய சிட்டா ஆகும்.

23) வா.சா.ஆ.5 ஆவணமும் ஜெகனாதன் மனைவி வெள்ளையம்மாள் என்பவரது பெயரில் உள்ளதே தவிர என்னுடைய பெயரில் இல்லை என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.6 ஆவணத்திலும் காப்பாளர் அருள்மிகு தெற்குவளவு மந்தை கருப்ப சாமி கோவில் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர என்னுடை பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

24) வா.சா.ஆ.7ஆவணம் வட்டாட்சியரிடம் கொடுத்த புகார் மனுவின் நகல் என்று தாக்கல் செய்யப்பட்டது சம்மந்தமாக வட்டாட்சியர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையோ வாட்டாட்சியர் அலுவலக முத்திரையோ காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் தெளிவாகவும் புரியக்கூடிய வகையிலும் இல்லை என்பதால் அது சம்மந்தமாக அதுடன் இணைக்கப்பட்டுள்ள கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட விவரம் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணமல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் யாரால் யாருக்கு எழுதிக் கொடுத்தது என்றால் பெரியபுள்ளியன் பேரன்மார்கள் அரசப்ப

வெள்ளையன் பேரன்மார்கள் வவுத்துப்புளியன் பேரன்மார்கள் தணிக்கன் பேரன்மார்கள் ஆகிய 4 கரையைச் சேர்ந்த வம்சதாரர்களுக்கு பொது காவல் கிராமகளான குருத்தூர் 1, ஜோதியாபட்டி 1, வாகைக்குளம் 1, 4 கிராமங்களின் இருந்து வரும்படியில் இருந்து, பெரியபுள்ளியன் கரைக்கு, அசரப்ப பேரன்மார்கள் கரைக்கு, சின்னப்புளியன், வவுத்துப்புளியன் பேரன்மார்கள் கரைக்கு பெரியபுளியன், தணிக்கன் பேரன்மார்கள் கரைக்கு மலையாண்டி ஆகிய நான்கு பேரும் வாங்கிறார்கள்.

25) வா.சா.ஆ.8 ஆவணத்தை தாக்கல் செய்வதற்கு எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரையை சேர்ந்தவர்கள் என்பதற்கும் நான் அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரையை சேர்ந்தவர்கள் என்பதற்கும் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்குரையில் சொல்லியுள்ளோம். வா.சா.ஆ.8 ஆவணத்தில் வம்சத்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது சம்மந்தமாக எந்த விவரமும் வழக்குரையில் நாங்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணத்தில் சொல்லப்பட்டள்ளு ஈடு பத்திரம் சம்மந்தமாக கூடுதல் ஆவணம் எதுவும் நாங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

26) வா.சா.ஆ.9 ஆவணத்தின்படி அதில் கண்டுள்ள சொத்தின் சர்வே எண் என்றால் ஆவணத்தை உடனடியாக பார்வையிட்டு சொல்லயிலாது. வா.சா.ஆ.9 ஆவணம் வழக்கு சொத்தில் எந்த சொத்திற்கு உரியது என்றும் எனக்கு தெரியாது என்றால் உடனடியாக பார்வையிட்டு சொல்லயிலாது.

27) வா.சா.ஆ.10 ஆவணத்தின்படி அதில் கண்டுள்ள சொத்தின் சர்வே எண் என்றால் ஆவணத்தை உடனடியாக பார்வையிட்டு

சொல்லயிலாது. வா.சா.ஆ.10 ஆவணம் வழக்கு சொத்தில் எந்த சொத்திற்கு உரியது என்றும் எனக்கு தெரியாது என்றால் உடனடியாக பார்வையிட்டு சொல்லயிலாது.

28) வா.சா.ஆ.11 ஆவணத்தின்படி அதில் கண்டுள்ள சொத்தின் சர்வே எண் என்றால் ஆவணத்தை உடனடியாக பார்வையிட்டு சொல்லயிலாது. வா.சா.ஆ.11 ஆவணம் வழக்கு சொத்தில் எந்த சொத்திற்கு உரியது என்றும் எனக்கு தெரியாது என்றால் உடனடியாக பார்வையிட்டு சொல்லயிலாது.

29) வா.சா.ஆ.12 ஆவணத்தின்படி அதில் கண்டுள்ள சொத்தின் சர்வே எண் என்றால் ஆவணத்தை உடனடியாக பார்வையிட்டு சொல்லயிலாது. வா.சா.ஆ.12 ஆவணம் வழக்கு சொத்தில் எந்த சொத்திற்கு உரியது என்றும் எனக்கு தெரியாது என்றால் உடனடியாக பார்வையிட்டு சொல்லயிலாது.

30) வா.சா.ஆ.13 ஆவணமானது ஈடுகடன் ஆவணமாகும். நான்கு கரையை சேர்ந்தவர்களுக்கு கருப்பணன் அம்பலம் என்ற அம்பலக்காரர் என்பவர் ஈடு வைத்து ரூ.500/- வாங்கியதற்கான ஆவணமாகும். வா.சா.ஆ.13 ஆவணத்தின்படி வாங்கிய கடன் செலுத்தப்பட்டதா என்பது குறித்து எந்த விளக்கும் நிரூபண வாக்கமூலத்திலோ வழக்குரையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தில் உள்ள சொத்து வழக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். நான்கு கரைகார்கள்தான் வரவு செலவு பார்ப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

31) வா.சா.ஆ.14 ஈடு கடன் ஆவணமும் வழக்கு சொத்திற்கான ஆவணம் இல்லை என்றால் சரிதான். நான்கு கரைகார்கள்தான் வரவு செலவு பார்ப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.14

ஆவணத்தின்படி வாங்கிய கடன் செலுத்தப்பட்டதா என்பது குறித்து எந்த விளக்கும் நிரூபண வாக்கமூலத்திலோ வழக்குரையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

32) வா.சா.ஆ.15 ஆவணமும் வழக்கு சொத்திற்கான ஆவணம் இல்லை என்றால் சரிதான். நான்கு கரைகார்கள்தான் வரவு செலவு பார்ப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.15 ஆவணத்தின்படி வாங்கிய கடன் செலுத்தப்பட்டதா என்பது குறித்து எந்த விளக்கும் நிரூபண வாக்கமூலத்திலோ வழக்குரையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

33) வா.சா.ஆ.16 கிரையப் பத்திர ஆவணத்தில் பட்டா எண் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே நம்பர் மட்டும் தெரியது பட்டா நம்பர் தெரியவில்லை. சர்வே நம்பர் என்ன என்றால் 304/6A மற்றும் 304/6B ஆகும்.

34) வா.சா.ஆ.17 கிரைய பத்திர ஆவணத்தில் எழுதி வாங்கியுள்ள நான்கு கரையை சேர்ந்த நபரகளில் யாரேனும் உயிருடன் உள்ளார்களா என்றால் வீரணன் என்ற ஒருவர் உள்ளார். அவர் ஏன் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் அந்த நேரத்தில் அவர் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். நான் அவரது உடன் பிறந்த தம்பி ஆவேன். மேற்படி விவரம் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அரசப்பன் வெள்ளையன் கரையை சேர்ந்த வீரணன் என்பவர் உயிருடன் இருந்த காரணத்தினால் அவரை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கை அவசியமான தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு கரையை சேர்ந்த நபர்களில் வீரணன்

என்பவரை தவிர மற்ற அனைவரும் இறந்துவிட்டனர். வா.சா.ஆ.17 ஆவணத்தில் என்னுடை கையெழுத்து இல்லை என்றால் சரிதான். டிரஸ்டி மட்டுமே கையெழுத்து போடுவார்கள்.

35) வா.சா.ஆ.18 ஆவணம் சர்வே எண்.609/2, 609/3, 609/4, 610/1, 610/2, 610/3, 611, 612/5, 614/1 ஆகிய சொத்துக்கள் சம்மந்தமான ஆவணமாகும். மேற்படி சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுவிட்டது. அந்த தொகையை வைத்து கோவில் கட்டப்பட்டுவிட்டது. மேற்படி விவரம் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றாலும் சரிதான். அனைவரும் சேர்ந்து கோவில் கட்டியதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 சான்றிட்ட நகலானது வழக்கு தாக்கல் செய்யப்பட்டபின்பு 19.08.2024ம் தேதி பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

36) வா.சா.ஆ.19 ஆவணம் வழக்கு சொத்துக்கு சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 2, 4 பிரதிவாதிகள் சேர்ந்து ஏமாற்றி இந்த ஆவணத்தை பதிவு செய்த விவரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின்படி கிராமத்தில் கட்டவில்லை. மேற்படி விவரம் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

37) வா.சா.ஆ.21 ஆவணம் நகல் ஆவணம் என்பதால் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

38) வா.சா.ஆ.22 ஆவணம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.22 தீர்மானம் குறித்து முழுமையாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்று முழுமையாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரயில்ல.

வா.சா.ஆ.22 ஆவணத்தில் கையெழுத்து போட்டதன் அருகில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

39) வா.சா.ஆ.23 ஆவணமும் கணக்கு பார்த்ததற்கான பற்று வரவு விவரமும் யார் யாரால் எழுதப்பட்டது என்பதை குறித்து நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.23 ஆவணத்தில் கண்டுள்ள வரவு செலவு பற்றி வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

40) வா.சா.ஆ.24 ஆவணம் வழக்கு சொத்திற்குரிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. அழகர் கோவில் மண்டகப்படி நடத்தப்படுவதற்கான ஆவணம் ஆகும்.

41) வா.சா.ஆ.25 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றிட்ட நகலானது 13.01.2025 தேதியில் பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணம் சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கமூலத்திலோ வழக்குரையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

42) இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு வாதிகளுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரையில் வரமாட்டேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் மீது பொய்யாக குற்றச்சாட்டுக்கிறேன் என்றாலும் நான் தான் கிராமத்திற்கு கொடுக்க வேண்டிய ரூ.300000/- கொடுக்காமல் இருந்து விட்டு அதை கேட்டதற்குதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் கோவில் கும்பாபிசேகம் நடந்தபோது நான் அரசப்ப வெள்ளையன் பேரன்மார்கள் கரை சார்ப்பாக

கலந்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் வழக்கில் கோரியுள்ள பரிகாரமான 4ம் பிரதிவாதி கிராம கணக்கை ஒப்படைக்க வேண்டுமென கோரியுள்ள பரிகாரத்திற்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி ஏற்கனவே வரவு செலவு கணக்குகளை ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த விவரம் தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் கிராமமே எங்களுக்கு எதிராக உள்ளது என்றால் சரியல்ல. 1ம் வாதி இளமாறன் என்பவரது மருமகன் வருவாய் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள காரணத்தினால் வருவாய் துறை ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கிராம கணக்கை முறைகேடாக பயன்படுத்தியதை பிரதிவாதிகள் தடுத்ததால் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.